

வெளியீடு

**வள்ளலார் கொள்கை நெறிப்பரப்பு இயக்கம்**

வடலூர்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# பேருபதேசப் பின்னணி

Scanned by CamScanner

உ

திருச்சிற்றம்பலம்

## பேருபதேசம் பின்னணி

வள்ளல் பெருமான் அருளாட்சி ஏற்றதற் அடையாளமாகச் சித்திவளாகத்தில் கட்டியதே சன்மார்க்க கொடி.

அந்த அருளாட்சியின் கோட்பாடுகளைப் பிரகடனப் படுத்தியதே மேட்டுக்குப்பத்தில் பேருபதேசம்.

அதனைக் கேட்டு எழுதியவர்கள் சரிவர எழுதாமல் சில இடைஞ்சல்களுடன் எழுதியுள்ளனர். அது பற்றிய விசாரணைதான் இந்தச் சிற்றேடு.

- மன்ற ஆசிரியர் குழுவினர்

உ

அருட்பெருஞ்ஜோதி துணை

## பேருபதேசம்

1. பேருபதேசம் என்றால் என்ன?

   வள்ளலார் செய்த பெரிய பிரசங்கம்

2. அது என்ன அதிகப் பிரசங்கமா?

   அல்ல, அல்ல. அழகுப் பிரசங்கந்தான்

3. எங்கே செய்தது?

   மேட்டுக்குப்பத்தில்

4. எப்போது?

   1873ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ஆம் தேதி

5. என்ன நடந்ததாம்?

   அப்போது வள்ளலார் கொடி கட்டி அறிவுரை வழங்கினார்கள்

6. எதற்குக் கொடி?

   இவ்வுலகில் அருள் ஆட்சி நடக்கத் தொடங்கியுள்ளதை அறிவிக்கும் கொடி அது. அக்கொடி நமது ஆன்ம அனுபவத்தில் நமக்குள்ளே காணக்கூடியது என்பதை அறிவிப்பதற்காக.



Scanned by CamScanner

7. பெயர்?

சன்மார்க்க கொடி

8. அன்றைக்கு என்ன விசேடம்?

அன்று அமாவாசை. செவ்வாய்க்கிழமை

9. பேருபதேசம் எப்படி வெளிப்பட்டது?

அன்பர்கள் எழுதிவைத்ததால்.

10. வள்ளலார் எழுதவில்லையா?

எழுதவில்லை

11. பின் என்ன செய்தார்?

கொடி ஏற்றியபின் கூற வேண்டியதைக் கூறினார்கள்

12. சரி, தொழுவூரார் என்ன செய்து கொண்டிருந்தார்?

கேட்டுக்கொண்டிருந்தார்

13. ஏன் எழுதவில்லை?

வள்ளலார் கட்டளை இடவில்லை.

14. வேறு முக்கியஸ்தர்கள் எழுதவில்லையா?

இல்லை



15. ஏன்?

அவர்களுக்கு அது மட்டுப்பட்டிருக்காது.

16. எதனால்?

அதீத அறிவிப்பு. அதனால் :

17. பின் யார் எழுதியது?

இரண்டு அன்பர்கள் எழுதி வைத்தது.

18. வள்ளலார் எழுதவில்லையா?

இல்லை

19. பின் என்ன செய்துள்ளார்கள்?

வள்ளலார் பேசியதைத் தொகுத்து எழுதி வைத்திருந்தார்கள்

20. அதை யார் வெளிப்படுத்தியது?

ஆ.பாலகிருஷ்ணபிள்ளை, வள்ளலார் உறவினர் இராஜமாணிக்கம் பிள்ளை, காரணப்பட்டு கந்தசாமி பிள்ளை போன்றவர்கள்.

21. பேருபதேசப் பின்னணிச் செய்திகள் என்றால் என்ன?

வள்ளலார் செய்த பேருபதேசத்தின் ஆதாரக் கருத்துகள் என்று அர்த்தம்



Scanned by CamScanner

22. அவை எல்லாம் சரிதானே?

சரியில்லாததினால்தான் இந்த ஏடு வந்திருக்கிறது

23. என்ன சரியில்லை?

பல செய்திகள் சரியில்லை.

24. முக்கியமானது?

ஐப்பசி 7ஆம் தேதீ புதன் கிழமை என்று குறிப்பிட்டி
ருந்தது. ஆனால் அன்று செவ்வாய்க்கிழமை

25. ஏன் அப்படிக் குறிப்பிட்டார்கள்?

மங்கலமற்ற நாள் எனத் தவறாகக் கருதியிருக்கலாம்

26. அடுத்தது என்ன?

கொடி கட்டினவுடன் நடந்த "விவகாரம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

27. ஏன்? அப்படிக் குறிப்பிட்டால் என்ன?

அதற்கு அர்த்தம் வேறு.

28. என்ன அர்த்தம்?

பிணக்கு என்று அர்த்தம்

29. அப்புறம்?

வழக்கு என்று அர்த்தம்.



30. அப்புறம்?

நடந்த நிகழ்ச்சிகள் என்று அர்த்தம்.

31. சரிதான். அப்புறம் என்ன சொல்கிறீர்?

முதல் முதல் கொடி கட்டுதல் பற்றிய குறிப்பு பற்றி

32. அதற்கு முன்பு கொடி கட்டப்படவில்லையா?

இல்லை. ஆனால் கொடி ஏற்றுதல் நடந்துள்ளது எனலாம்.

33. எங்கே?

வடலூர் சத்திய ஞான சபையில்.

34. எப்போது?

1872 தைப்பூச நாளின் முன்தினம்

35. எங்கு ஏற்றினார்கள்?

வடலூர் சத்திய ஞானசபை முன்புறமுள்ள இடதுபக்க கொடி மரத்தில்.

36. அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

முன்னது விழாக் கொடி பின்னது ஆட்சிக் கொடி.

37. ஓ அப்புறம் என்ன?

"இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகிற வரையில் என்னும்" தகவல் பற்றி.



Scanned by CamScanner

38. அதில் என்ன இருக்கிறது?

நிறைய இருக்கிறது.

39. சொல்லும்?

1. எந்த ஆண்டவர் எதற்காகச் சாலைக்குச் செல்கிறார்?
2. அங்குச் செல்வதின் கருத்து என்ன?
3. மேட்டுக் குப்பத்தில் இருந்த ஆண்டவர் யார்?
4. அப்படியானால் ஆண்டவர் பீடம் சாலையில் எத்தனை?

இப்படிப் பலவகை

40. என்ன சொல்கிறீர் அது பற்றி மேலும்?

ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

41. தொழுவூர் வேலாயுத முதலியாரைச் சந்தேகம் வந்தால் கேளுங்கள் என்கிறாரே ஐயா. அது சரியா?

முற்றிலும் சரி.

42. எப்படி? கொட்டை - மொட்டை - பட்டை - கட்டை - குட்டையுள்ள தொழுவூராரை ஏன் குறிப்பிட வேண்டும்?

அவர்தம் ஆன்ம மலர்ச்சி, அறிவு வளர்ச்சி சரியான திசையில் இருந்ததால் அதன்படி ஐயா குறிப்பிட்டுள்ளார்கள்.



43. இரண்டும் பெற்றவரா முதலியார்?

அதனால்தான் ஐயாவின் பிரதம மாணவராகி ஒளிர்ந்தார்.

44 ஐயா அவரைப் பற்றிப் பேருபதேசத்தில் குறிப்பிட்டிருந்தும் பேருபதேசத்தை எழுதி வைக்கவில்லையே ஏன்?

காரணம் இருக்கிறது.

45. என்ன காரணம்?

சற்குருவுக்கு மிஞ்சிய சீடராக விரும்பவில்லை.

46. பின் எப்படி?

எவ்வழி அரசரோ அவ்வழி குடிமக்கள் என்றிருந்துவிட்டார்.

47. சரி. திரை அறிவிப்பினை எழுதியதிலும் தேர்ச்சி பெறவில்லையாமே?

ஆமாம்

48. எப்படி?

முதல் திரை இரண்டு கூறாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மற்றவை எட்டு திரைகள் என்று அடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நாம்



Scanned by CamScanner

அறிவது சபையில், வழிபாட்டில் உள்ள ஆறு திரைகள் மட்டுமே.

*49. ஏன் இந்த ஏற்றம் மற்றும் மாற்றம்?*

மொத்தத்தில் பேருபதேசத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள வள்ளலார் வரலாறு, திருவருட்பா, உரைநடைப்பகுதி ஆகியவற்றை சரிவர படித்திருந்தால் மட்டுமே சொல்ல இயலும்.

*50. திரைகள் எத்தனை?*

கணக்கு இல்லை.

*51. ஏன்?*

கருமையில் பச்சை - பொன்மையில் பச்சை ஆகிய 2 திரைகளுடன் மற்ற 8 திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும் என்பதால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக் கொண்டிருப்பது அந்த திரைகள் என்பதால்.

*52* உமது தலையைச் சொரியணும்?

இருப்புச் சீப்பால் சொரியும் அப்போதுதான் சரிவரும்.

*53.* தொல்காப்பியம் கூறிய இலக்கணம் முழுவதும் குற்றமே என்பது பற்றி ஐயா கூறியது சரிதானே?

அது எனக்குச் சரியாகப் படவில்லை.



*54. ஏன்?*

"முழுவதும் குற்றமே என்பதால்" - ஐயாவே தொல்காப்பிய இலக்கணத்தைப் பல இடங்களில் கையாண்டுள்ளார்கள். இதில் அ முதல் ஔ வரை உயிரெழுத்துகள் 12 என்பது கூடக் குற்றமா? - மெய் எழுத்து 18 என்பது கூடக் குற்றமா? - புணர்ச்சி விதிகள் தான் குற்றமாக இருக்கிறது என்று கூறலாம்.

*55.* தொல்காப்பியம் ஏன் அப்படி எழுதப்பட்டுள்ளது?

ஐந்து மல வெற்றியைத் தொல்காப்பியர் பெறவில்லை. அதனால் மறைப்பு நேரிட்டுள்ளது.

*56.* வள்ளலார் அதில் வெற்றி பெற்றவர்தானே?

ஆமாம், அதிலென்ன சந்தேகம்?

*57.* அவரே எழுதி வைப்பது?

எழுதியிருப்பார்கள் - தென்மொழி விளக்கம் கூட எழுதுவதாகத் தான் தொடர்ந்தார்கள் - ஆனால்

*58.* ஆனால்? ஏன் எழுதப்பெறவில்லை?

அதைவிட முக்கிய ஜோலி இருந்துவிட்டது.

*59.* அது என்ன?

ஆண்டவரைக் காதலிக்க வேண்டியிருந்தது. கலந்திட வேண்டியிருந்தது. அருட்சக்தியை மணக்க-வேண்டியிருந்தது. புணர்ந்திட வேண்டியிருந்தது.



Scanned by CamScanner

60. அப்புறம் உள்ள தகவல்?

"எத்தேவரையும் நின் சாயையால் பார்த்ததே அன்றித் தலைவ! வேறு எண்ணியதுண்டோ" என்று தொடங்கும் பேருபதேச வரி திருவருட்பாவில் இல்லை.

61. இல்லையா?

இல்லைதான்.

62. பின் எப்படி எழுதப்பட்டுள்ளது?

ஐயா எழுதாததினால் அப்படித் தெரிந்த வரை எழுதி வைப்பப்பட்டுள்ளது.

63. அதனைப்போய் இத்தனை வருடம் உருப்போட்டு நான் உபதேசித்தேனே?

உமக்கு எப்பொழுதிலிருந்து இந்த உபதேச வேலை.

64 வெள்ளைத் தலைவட்டம், வெள்ளை முக்காடு, வெள்ளை முண்டாசு, வெள்ளை உருமாலை, வெள்ளை தலைக்கட்டு, வெள்ளைத் தொப்பி போட்டுக் கட்டியதிலிருந்து.

பாவந்தான் ...

65. ஏன்?

பெரியோர் பாட்டில் பிழை செய்ததால் வந்த பாவம் தான்.

66. இராமா! இராமா!! அப்புறம் வள்ளலார் தம்மைத் தெய்வமில்லை என்கிறாரே?

ஆமாம்

67. அது சரியா?

அது சரி! அது சரியில்லை!!

68. என்னய்யா! தப்பிலேயும் அடிக்கிறீர்! தாளத்திலேயும் அடிக்கிறீரே?

என்ன செய்வது? திரு அருட்பா 6ஆம் திருமுறை 1178ஆம் பாடல் மூலம் இராமலிங்கரே இறைவனாகும் என்று தெரிய வருவதால் அப்படி அடிக்கிறேன்.

69. மகாமந்திரம் எப்படி எழுதவேண்டும்?

உணர்வுக்குத் தகுந்தபடி எழுதலாம்.

70. வரையறை இல்லையா?

இல்லை.





Scanned by CamScanner

71. எப்படி?

அகவலில் "அருட்பெருஞ்ஜோதி" என்னும் ஒரே தொடரையே நான்கு முறை திரும்பத் திரும்ப ஐயா எழுதியிருப்பதால் சொல்கிறேன்.

72. சரி "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின்" என்ற தொடர் யாருடையது?

தாயுமானவருடையது.

73. அவர் எந்த மார்க்கம்?

மத சன்மார்க்கம்

74. அதை ஏன் ஐயா பேருபதேசத்தில் கூற வேண்டும்? ஐயா பாடலில் உள்ளதையே கூறக்கூடாதா?

விளக்குவதற்காகத்தான்

75. சுத்த சன்மார்க்க விளக்கம் கூற வந்த இடத்தில் மத சன்மார்க்க உதாரணம் ஏன்?

அது ஏன் என்று தெரியவில்லை.

76. ஆமாம். சுத்த சன்மார்க்கம் என்னும் தொடரை ஐயா பேருபதேசத்தில் எங்கே கையாண்டுள்ளார்?

ஒரு இடத்திலும் இல்லை



77. இல்லையா? எது போல்?

திருவள்ளுவர் தம் திருக்குறளில் தமிழ் என்றோ தமிழ்நாடு என்றோ கையாளவில்லை. அதுபோல்.

78. ஏன் அப்படி?

எல்லோரையும் அனுசரிப்போம் என்றுதான்.

79. யார் அந்த எல்லோரும்?

நாத்திகர், சமயவாதிகள், மதவாதிகள் அனைவரையும் தான்

80. அவர்களுக்கு வள்ளலார் சொல்லவந்த முக்கிய செய்தி என்ன?

சடங்கு, வழிபாடு கிடக்கட்டும், ஜீவகாருண்ய வழிபாடு வரஎரட்டும் என்பதுதான்.

81. கொடி நிறம் மேலே மஞ்சளா?

இல்லை, பொன்மை

82. கொடி அளவு பாதி மஞ்சள் பாதி வெண்மையா?

அதுவும் இல்லை. கால் பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை.



Scanned by CamScanner

83. எப்படிச் சொல்கிறீர்?

திருவருட்பா 6ஆம் திருமுறை, திருவடிநிலை 72-ஆம் பாடலில் கூறிய, என் வணச் சோதிக் கொடி என்பதால் சொல்கிறேன்

84. "என் வணச் சோதிக் கொடி" என்றால் என்ன?

அது ஆன்மக் கொடி என்று அர்த்தம்.

85. அதன் நிறம்?

அது கால் பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை

86. அது எங்கே பறக்கிறது?

நமது உடலில் கீழ் நவநிலைகள் முடியும் இடத்தில் பரநாத ஸ்தானத்தில் பறக்கிறது. அது புருவமத்தியிலிருந்து 7½ அங்குலத்தில் இருக்கிறது.

87. அப்ப புருவமத்தியில் ஒரு நாடி ஏறவும் இறங்கவும் இருக்கிறது. அதன் வெளிப்புற அடையாளமே கொடி என்றது எதைக் குறிக்கிறது?

அது சுத்த மாயாக் கொடியைக் குறிப்பது.

88. அது உண்மைக் கொடி இல்லையா?

உண்மைக் கொடியைப் பிடிக்க டிரைனிங் (Training) தரும் கொடி அது.



89. அப்படியா?

அப்படியே தான்.

90. அது அல்லவா கொடி என்று இதுவரை அறிந்திருந்தோம்?

அது மட்டுமல்ல அன்றைய தினம் பாடும் கொடிப் பாட்டும் சன்மார்க்க கொடிக்கான பாட்டு இல்லை.

91. பின் எந்தக் கொடிக்கான பாட்டு ஐயா?

அது சிற்சத்தி அம்மைக்கான தோத்திரப்பாட்டு

92. அது யார் சிற்சத்தி?

அதுதான் ஆன்மாவிற்கு ஆதார ஆதேயமாகும் அருட்பேராற்றல்

93. அப்படியா?

ஆமாம், அதனால் வள்ளலார் இரண்டு கொடி மரம் நட்டிருந்தார்களாம்.

94. இது என்னையா புதுக்கரடி! அண்டப் புளுகு?

சரி, இதைப் புளுகு - கரடி என்றே வைத்துக் கொள்ளும்

Scanned by CamScanner

95. அதற்கு நீர் என்ன சொல்ல வருகிறீர்?

புருவ மையக் கொடி முன்னது. பரநாதக் கொடி பின்னது. உபாயக் கொடி முன்னது. உண்மைக்கொடி பின்னது. அத்துடன் உற்சவக் கொடி சபையினது. அருள் ஆட்சிக் கொடி சித்திவளாகத்தது என்று சொல்ல விரும்புகிறேன்.

96. மேலும் இது பற்றி நீர் என்ன கூற முடியும்?

அது சத்தியக் கொடி என்றும் சன்மார்க்கம் விளங்க வைக்கும் கொடி என்றும் கூற முடியும்.

97. நல்லது! அதில் என்ன விசேடம் இருக்கிறது?

அது அருள் அரசியைக் கைப்பிடித்து அருள் ஆட்சி பொறுப்பை ஏற்ற கொடி என்ற விசேடம் அதில் இருக்கிறது.

98. போச்சு! போச்சு!! கைபிடித்த காதல் நிறைவேறவா?

இந்தாரும் லட்டு.

99. அட! நான் அல்வா அல்லவோ தர வேண்டும். நன்றி! சென்றுவருகிறேன்.

•



"எந்த போஜனத்திலும் புலால்
எந்த வகையினும் புசிக்கப்படாது".

- வள்ளலார்

Scanned by CamScanner